# சிதறி விழுந்தன பார்வைகள்

காலையின் மௌனத்தைச் சுமந்து
வழுக்கிச் செல்லும்
பெருவிரைவு ரயிலெங்கும் அழகுமுகங்கள்

இப்போதுதான் திருத்தியது போன்ற
நேர்த்தியான புருவ மத்தியில்
மச்சமோ என்றெண்ணும் அளவுக்கு
சின்னதாய் ஒரு பொட்டோடு
ஒற்றைக்கல் மூக்குத்தி
மெல்ல திரும்பும்போது மட்டுமே மினுமினுத்தது

நேராக்கப்பட்ட முடிக்கற்றையை விலக்கி
கைத்தொலைபேசியை
காதருகே நுழைத்து
அதிகம்   சிவக்காத
பளபளப்பான உதட்டிதழ் திறந்து
சத்தம் அதிகமில்லாமல்

பேசுகிறாளா இல்லையாவென
நினைத்திருக்கும் வேளையில்

பேசிக்கொண்டே அவள் திரும்பியபோது
என் பார்வையோடு மோதிய அவள் பார்வையால்
சுக்குநூறாக உடைந்து தெரித்த
பார்வைக்கண்ணாடிச் சில்லுகளில்
பிரதிபலித்துச் சிதறின அவளின் பிம்பங்கள்

என் உள்ளங்கையில் விழுந்த சில்லொன்று
ஒளி ஓடையாய் மாறி
கைரேகைகளின் ஊடே பாய்ந்தோடி
உடலின் உள்சென்று
இதயத்தில் இறங்கி
என் இமையை மூடியது

நிறுத்தத்தில் இறங்குவதை மறந்தேன்

# பயணம்

காலமும் தடங்களும்
அதீத ஆயத்தங்களோடு
நமக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது

உலகம் உருண்டையாகப் படைக்கப்பட்டது
தங்கு தடையின்றி உலா வரத்தான்

தேங்கிக் கிடப்பதால் வலுவிழக்கிறது உள்ளம்

எண்ணத்தின் வேகத்தில்
செயலும் பயணிக்கும் பொழுதில்
கனவு காணவும் காத்திருக்கவும் நேரமில்லாமல் போகிறது

நிரந்தரமில்லாத உலகில்
நிரந்தரமாக விட்டுச் செல்ல
உன்னிடமும் என்னிடமும் நிறையவே இருக்கிறது

வாழ்நாள் பயணத்தில்
உலகப் பரப்பில் நடந்த சுவடுகள்
பூங்காவின் சருகுகளாய்
கூட்டி அள்ளி குப்பைத்தொட்டியில் வீசப்பட்டால்
வாழ்வின் நாட்களை
வெறுமனே விழுங்கியிருக்கிறோம் என்றாகிறது

காலத்தின் தேவையை முன் உணர்ந்து
உலகத்தை அழகு செய்தவர்களின்
பாதங்கள் பூஜிக்கப்படுகிறது

ஓடிக் களைக்கும் கால்கள் ஒரு நாள் ஓய்வுறும் போது
நினைவுகளின் திரை விரிகிறது

எதிர்பார்க்கவில்லை என்றாலும்
குறித்த காலத்தில்
காலம் நமக்காகவே காத்திருக்கவே செய்கிறது

# சுடர் மணம்

வளைந்து கொடுப்பதும்
பின்
நேர் தனது நிலைக்கு நளினமாய் திரும்புவதும்
இயற்கையாகவே அழகு சேர்க்கிறது

சூரிய உதயத்தில்
விரிந்த கடற்கரையோர மணலில்
ஒற்றைக்காலில் கைஉயர்த்தி வணக்கம் சொல்லி நிற்கும்
யோகா அழகியாய்
கோயிலின் கருவறையில்
நிதானமாக நிமிர்ந்து நிற்பதும் பேரழகு

காற்றின் ஆணவத்தால்
காட்சியில் இருந்து மறைந்தும்
வெண்நூலாய் மிதந்து
பின் புகையாய் திரிந்து
அக்காற்றிலேயே தவழ்ந்து வந்து
நெய்த்திரியின் வாசமாய்
என்னில் உட்சென்று தங்கியது

இப்போது நினைத்தாலும்
அம் மணம் கிளர்ந்தெழுகிறது

# அமைதிகொள்

சிக்கலால் ஆன அழகான கோலமாக
சுற்றி இருக்கும் சூழ்நிலைகள்
வாழ்நாட்களைப் பின்னிக் கொண்டே போகிறது

உலகத்தைப் புரிந்துகொள்ள
தினந்தோறும் படிக்க
பழக்கப்பட்டிருக்கிறோம்

உள்மனம் படிப்பதற்கு ஓய்வின்றி
காலைகளும் மாலைகளும் கரைந்தோடி
அலுவலகமும் வீடும் அலைக்கழித்து
மீதமிருக்கும் நாட்களையும் பிடுங்கிக் கொண்டு
ஒரு ஓரமாய் வீசிஎறிவதற்குள்

மொழியற்ற மனத்தகவல் ஊற்றின் முன்
மண்டியிட்டு இமைமூடி அமைதிகொள்வோம்

உணர்வுகளின் உச்சத்தில்
சலனமான மனதின் சத்தத்தில்
சத்தியத்தை புரிந்துகொள்ள
சாத்தியங்கள் இருப்பதில்லை

இமைமூடி
ஆழ்மனத்தோடு உரையாடி
ஆற்றல் பெருக்கி
அற்புத உலகு செய்வோம்

# நகரம்

கிராமத்திலிருந்து
நான் பெற்ற அன்புகளையும்
வைத்திருந்த அனுபவங்களையும்
பிடுங்கிக்கொண்டு
அடர்ந்த மனிதக் காட்டில் தனிமரமாய்
என்னைப்போலவே
மற்றவர்களையும் அலைய விட்டுவிட்டது நகரம்

# *பேரிழப்பிற்குப் பின்*

பேரிழப்பு
எந்த தடையங்களையும்
விட்டுவைப்பதில்லை
அனுபவங்களனைத்தையும் அள்ளிச்சென்று
அறிவிலியாய் ஆக்கிவிடுகிறது

மீண்டெழுந்து
எதிரே புலப்படாத பாதையில்
நடக்கக் கால்கள் தள்ளாடினாலும்

இழப்பிலிருந்து வரும்
அனுபவ கரங்கள்
முதுகில் தட்டிக்கொடுக்கவே செய்கிறது